தினமணி

**நிலக்கடலை பயிருக்கு மானிய விலையில் ஜிப்சம்**

First Published : 07 Aug 2010 08:45:15 AM IST

கோபி, ஆக. 6: மானாவாரி நிலக்கடலை சாகுபடியில் அதிக மகசூல் பெற ஜிப்சம் இட வேண்டும் என கோபி வேளாண்மை உதவி இயக்குநர் ஆசைத்தம்பி தெரிவித்துள்ளார்.

÷கோபி வட்டாரத்தில் மானாவாரியில் 2000 ஏக்கருக்கு மேல் நிலக்கடலை பயிரிடப்பட்டுள்ளது.

நிலக்கடலை வளர்ச்சிக்கு கால்சியம் சத்து 18 முதல் 23 சதவீதம் வரை உள்ள ஜிப்சம் முக்கிய பங்கு வகிக்கிறது. நிலக்கடலையில் எண்ணெய் சத்து அதிகரிக்க கந்தகம் அடங்கிய ஜிப்சம் இடவேண்டும்.

÷இதனால் மண் இறுக்கம் தளர்த்தப்பட்டு காய்களின் பருமன் ஒரே மாதிரியாகவும், திரட்சியாகவும் வளரும்.

ஏக்கருக்கு 80 கிலோ ஜிப்சம் அடியுரமாக இட வேண்டும். விதைத்த 45வது நாளில் களை எடுக்கும் முன் இட்டு மண் அணைத்தால் சாகுபடி பெருகும்.

÷கோபி, கூகலூர், மற்றும் வெள்ளாங்கோவில் வேளாண் விரிவாக்க மையங்களில் மானிய விலையில் ஜிப்சம் வழங்கப்படுகிறது என தெரிவித்துள்ளார்.

**நறுமணப் பயிர்களை பயிரிட வேண்டும்: விவசாயிகளுக்கு ஆட்சியர் அழைப்பு**

First Published : 06 Aug 2010 09:44:14 AM IST

திருவண்ணாமலை, ஆக. 5: விவசாயிகள் நறுமணப் பயிர்களை அதிகளவில் பயிரிட முன்வர வேண்டும் என மாவட்ட ஆட்சியர் மு.ராஜேந்திரன் கூறினார்.

திருவண்ணாமலை மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் வியாழக்கிழமை வேளாண் வணிகத் துறை சார்பில் நறுமணப் பயிர்கள் குறித்த கருத்தரங்கில், ஆட்சியர் பேசியது:

திருவண்ணாமலை மாவட்டத்தில் நறுமணப் பயிர்களான பாமரோசா, சிட்ரோனெல்லா,

எலுமிச்சை புல் உள்ளிட்டவை 1800 ஏக்கர் பரப்பில் பயிரிடப்பட்டு வருகின்றன. தண்டராம்பட்டு பகுதியில் நறுமணப் பயிர்கள் பயிரிடப்படுகின்றன.
100 கிலோவில் ஒரு கிலோ எண்ணை பெறுவதற்கு பதில் ஒன்றரை கிலோ எண்ணெய் பெறுவதற்கான வழிமுறைகளை விவசாயிகள் ஆராய வேண்டும். நறுமண எண்ணெய்யை சந்தைப்படுத்த வேளாண் வணிகத் துறை தயாராக உள்ளது.

இடைத்தரகர்கள் இன்றி விவசாயிகள் அதிக லாபம் ஈட்ட நடவடிக்கை எடுக்கப்படும். நறுமணப் பயிர்களை எப்படி அறுவடை செய்வது, எவ்வாறு நோய்களில் இருந்து காப்பது, உரங்களை இடுதல் போன்றவற்றை அறிய வேண்டும் என்றார் ராஜேந்திரன்.
கோவை வேளாண் பல்கலைக்கழக பேராசிரியர்கள் நளினா, வனிதா ஆகியோர் நறுமணப் பயிர்களுக்கான சந்தை வாய்ப்புகள், பயிர்கள் ரகங்கள் குறித்து விளக்கினர். துணை இயக்குநர் ந.லட்சுமிபதி, ஆட்சியரின் நேர்முக உதவியாளர் வடமலை உள்ளிட்டோர் கலந்துகொண்டனர்.

**விவசாயப் பொருள்காட்சி தொடங்கியது**

First Published : 07 Aug 2010 08:18:01 AM IST

விழுப்புரம், ஆக. 6: விழுப்புரம் புதிய பஸ் நிலையம் அருகில் உள்ள வி.வி.ஏ. ஆறுமுகம் மஹாலில் 4 நாள்கள் நடைபெற உள்ள விவசாயப் பொருள்காட்சியை மாவட்ட வருவாய் அலுவலர் ந. வெங்கடாசலம் வெள்ளிக்கிழமை தொடங்கி வைத்து பார்வையிட்டார்.
÷கண்காட்சியில் 100 அரங்குகள் அமைக்கப்பட்டுள்ளன. இதில் விவசாய கருவிகள், பல்வேறு வகையான நீரிறைக்கும் மோட்டார்கள், உர வகைகள், விதைகள், இயற்கை உரங்கள், இயற்கை முறையில் விளைவிக்கப்பட்ட விளைப் பொருள்கள், கோழி வளர்ப்பு முறை, மண் ஆய்வு மையம் உள்ளிட்ட அரங்குகள் அமைக்கப்பட்டுள்ளன.
÷பல நிறுவனங்களின் டிராக்டர்கள், விவசாய கருவிகள் காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளன. விவசாயிகள் இங்கேயே தங்களுக்கு தேவையான விவசாய கருவிகளை வாங்கிக் கொள்ளலாம் என்று சென்னை டிரேட் ஈவென்ட்ஸ் வணிக இயக்குநர் இரா.இளங்கோ தெரிவித்தார்.

÷தோட்டக்கலைத்துறை துணை இயக்குநர் ஆர். பாலகிருஷ்ணன், ரோவர்ஸ் விவசாயக் கல்லூரி முதல்வர் ஜேம்ஸ் பிச்சை, வேளாண்மை அறிவியல் நிலைய பேராசிரியர் சாத்தையா, இணை பேராசிரியர் பூர்ணிமா உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

**பவானிசாகர் அணை நீர்மட்டம் -77.46 அடி**

First Published : 07 Aug 2010 09:11:38 AM IST

ஈரோடு, ஆக. 6: பவானிசாகர் அணை நீர்மட்டம் வெள்ளிக்கிழமை 77.46 அடியாக இருந்தது.
அணைக்கு விநாடிக்கு 3,720 கன அடி வீதம் தண்ணீர் வந்தது. அணையிலிருந்து ஆற்றில் விநாடிக்கு 1,200 கன அடி வீதம் தண்ணீர் திறக்கப்பட்டுůள்ளது.
அணையிůன் நீர் இருப்பு 14.38 டிஎம்சி.

**சொட்டு நீர்ப்பாசனம் மூலம் சாகுபடி செய்யப்பட்ட கரும்பு அறுவடை**

First Published : 06 Aug 2010 11:14:59 AM IST

அறந்தாங்கி, ஆக. 5: எருக்கலக்கோட்டையில் துல்லிய சொட்டுநீர்ப் பாசனம் மூலம் சாகுபடி செய்யப்பட்ட கரும்பு அறுவடை முகாம் வியாழக்கிழமை நடைபெற்றது.
தேசிய வேளாண்மை வாரியத்தின் மூலம், துல்லிய முறையில் கரும்பில் சொட்டுநீர்ப் பாசனம் 2008-09 திட்டத்தின்படி வேளாண்மை துறையும் ஈ.ஐ.டி. பாரி சர்க்கரை ஆலையும் சேர்ந்து எருக்கலக்கோட்டை, ஆவணத்தான்கோட்டை, பனங்குளம், பூவற்றகுடி ஆகிய மையங்களில் விவசாயிகள் கரும்புச் சாகுபடி மேற்கொள்ள நடவடிக்கை எடுத்தன.

இப்படி சாகுபடி செய்யப்பட்ட எருக்கலக்கோட்டை கணேசன் என்ற விவசாயியின் வயலில் கரும்பு அறுவடை வியாழக்கிழமை நடைபெற்றது. இதை ஒரு செயல்விளக்க முகாமாக வேளாண் துறையினர் நடத்தினர்.
இதுகுறித்து விவசாயி கணேசன் கூறுகையில், ""சர்க்கரை ஆலையினர் சாகுபடிக்கு ஏக்கருக்கு ரூ. 6 ஆயிரம் மானியம் கொடுத்தனர். வேளாண்மை துறையினர் சொட்டுநீர்ப் பாசனக் கருவிகள் வாங்க 65 சதம் மானியம் அளித்தனர். சாதாரணமான பாசன முறையில்

ஹெக்டேருக்கு 60 டன் கரும்பு விளைச்சல் கிடைத்தது. துல்லிய சொட்டுநீர்ப் பாசன முறையில் ஹெக்டேருக்கு 90 டன் கிடைத்திருக்கிறது" என்றார்.

வேளாண் துறை உதவி இயக்குநர் இராம.சிவக்குமார் கூறுகையில், ""இந்தப் பாசன முறையில் செலவு குறைவு; லாபம் அதிகம். எதிர்காலத்தில் திருநாளூர்,மறமடக்கி, பரவாக்கோட்டை, அரசர்குளம் ஆகிய பகுதிகளில் இந்தப் பாசன முறையைச் செயல்படுத்தவுள்ளோம்" என்றார்.

இந்நிகழ்ச்சியில், அறந்தாங்கி ஒன்றியக் குழுத் தலைவர் சிவ.வீ.மெய்யநாதன், ஈ.ஐ.டி. பாரி சர்க்கரை ஆலையின் முதன்மை மேலாளர் கே. செந்தில்குமார், துணை மேலாளர் (விவசாயம்) எம்.வைரமுத்து, வேளாண் அலுவலர் குமணன், துணை அலுவலர்கள் பாண்டிமுருகன், பாஸ்கர், அனிதா விதை அலுவலர் குருநாதன் மற்றும் விவசாயிகள் பங்கேற்றனர்.

**குறைந்த விலையில் அரிசி, கோதுமை: சரத் பவார்**

First Published : 07 Aug 2010 01:20:44 AM IST

Last Updated : 07 Aug 2010 04:44:47 AM IST



புது தில்லி, ஆக.6: வறுமைக்கோட்டுக்குக் கீழ் வாழும் குடும்பங்களில் புதிதாக சேர்ந்துள்ள 1.5 கோடி குடும்பங்களுக்கு அரிசி, கோதுமை ஆகியன மானிய விலையில் அளிக்கப்படும் என்று மத்திய வேளாண் அமைச்சர் சரத் பவார் கூறினார்.

மாநிலங்களவையில் வெள்ளிக்கிழமை துணைக் கேள்விகளுக்கு பதிலளிக்கையில் அவர் இத்தகவலை தெரிவித்தார்.
ஏற்கெனவே வறுமைக் கோட்டுக்குக் கீழ் வாழும் மக்களின் எண்ணிக்கை 6.57 கோடி என கணக்கிடப்பட்டிருந்தது. ஆனால் சமீபத்தில் திட்டக்குழு நடத்திய ஆய்வின்படி இந்த எண்ணிக்கை 1.50 கோடி கூடுதலாக இருந்தது. இவர்களுக்கு மகாத்மா காந்தி பிறந்த நாளான அக்டோபர் 2 முதல் குறைந்த விலையில் அரிசி, கோதுமை வழங்கப்படும் என்று பவார் கூறினார். இதன் மூலம் வறுமைக் கோட்டுக்குக் கீழ் வாழும் மக்களின் எண்ணிக்கை 8.07 கோடியாக உயர்ந்துள்ளது.ஏழைகளைக் கண்டறிவது தொடர்பாக டெண்டுல்கர் குழு வகுத்தளித்த விதியின்படி ஏழைக் குடும்பங்களின் பட்டியல் எடுக்கப்பட்டது. மத்திய அரசு விரைவிலேயே உணவு பாதுகாப்பு மசோதாவைக் கொண்டு வரத் திட்டமிட்டுள்ளது. அதன் ஒரு கட்டமாக இத்தகைய கணக்கெடுப்பு நடத்தப்பட்டது.இப்போது வறுமைக் கோட்டுக்குக் கீழ் வாழும் குடும்பங்களுக்கு 35 கிலோ அரிசி அல்லது கோதுமை வழங்கப்படுகிறது. அரிசி ஒரு கிலோ ரூ. 5.65-க்கும், கோதுமை கிலோ ரூ. 4.15-க்கும் வழங்கப்படுகிறது.

வறுமைக் கோட்டுக்குக் கீழ் வாழும் மக்களுக்கு ஒரு கிலோ அரிசி அல்லது கோதுமையை ரூ. 3 விலையில் வழங்குவது குறித்து அரசு யோசித்து வருகிறது. மாதத்திற்கு 20 கிலோ அல்லது 25 கிலோ அளிப்பதா அல்லது 35 கிலோ அளிப்பதா என்பது தீர்மானிக்கப்படாததால், இது செயல்படுத்தப்படவில்லை. தேசிய உணவு பாதுகாப்பு மசோதா நிறைவேறியபிறகு எத்தனை கிலோ அளிப்பது என்பது உறுதி செய்யப்படும் என்றார் பவார்.
விலைக்கட்டுப்பாடு: சர்க்கரை மீதான விலைக்கட்டுப்பாட்டை நீக்குவது குறித்து அரசு முடிவெடுக்கவில்லை என்று பவார் மேலும் கூறினார். இந்திய சர்க்கரை உற்பத்தியாளர்கள் சங்கம் மற்றும் தேசிய சர்க்கரை ஆலை கூட்டுறவு சம்மேளனம் ஆகியன விலைக்கட்டுப்பாட்டை நீக்க வேண்டும் என்று தொடர்ந்து வலியுறுத்துகின்றன.

தினமலர்

**உழவர்சந்தையில் விவசாயிகளுக்கு சாகுபடி தொழில்நுட்ப பயிற்சி**

பதிவு செய்த நாள் : ஆகஸ்ட் 07,2010,02:29 IST

தர்மபுரி: தர்மபுரி மாவட்ட உழவர்சந்தைகளுக்கு காய்கறிகள் வரத்தை அதிகரிக்க, விவசாயிகளுக்கு வேளாண் வணிகத்துறை மூலம் தொழில்நுட்ப சாகுபடி பயிற்சி அளிக்கப்பட்டது. தர்மபுரி, பென்னாகரம், பாலக்கோடு மற்றும் அரூர் உழவர் சந்தைகளில் காய்கறிகள் வரத்தை அதிகப்படுத்தவும், தற்போது பெய்துள்ள மழையை பயன்படுத்தி குறுகிய கால காய்கறிகளை சாகுபடி செய்து உற்பத்தியை பெருக்கவும் மாவட்ட வேளாண்மை துறை நடவடிக்கை எடுத்து வருகிறது. முதற்கட்டமாக கிராமப்புற விவசாயிகளுக்கு உழவர்சந்தை அடையாள அட்டைகள் வழங்கி, அவர்களுக்கு சாகுபடி பயிற்சியளித்து உழவர்சந்தைகளுக்கு காய்கறிகளை விற்பனைக்கு கொண்டு வர அறிவுறுத்தப்பட்டது. மாவட்ட வேளாண்மை துணை இயக்குனர் நாகராஜன் தலைமையில் பயிற்சி முகாம் நடந்தது.

தர்மபுரி தாலுகாவில் சோகத்தூர், வெங்கட்டம்பட்டி, வெள்ளோலை, கிருஷ்ணாபுரம், பென்னாகரம் தாலுகாவில் வண்ணாத்திப்பட்டி, கரியம்பட்டி, பாலக்கோடு தாலுகாவில் பெத்தனஅள்ளி, மல்லசமுத்திரம், பி.செட்டிஅள்ளி, அரூர் தாலுகாவில் தம்பிசெட்டிப்பட்டி, கோ.கூட்ரோடு, பறைப்பட்டி புதூர், கே.வேட்ரப்பட்டி ஆகிய கிராமங்களிலும் விவசாயிகளுக்கு பயிற்சி அளிக்கப்பட்டது. வேளாண்மை உதவி அலுவலர்கள் நரசிம்மன், பழனி, கோபால், ரங்கநாதன், தமிழ்செல்வி, ஜெயராமன் ஆகியோர் பயிற்சிக்கான ஏற்பாடுகளை செய்தனர்.

**விதை கிராம திட்டத்தில் மானிய விலையில் விதை**

பதிவு செய்த நாள் : ஆகஸ்ட் 07,2010,02:17 IST

நாமக்கல்: "விதை கிராமத்திட்டத்தின் கீழ் மானிய விலையில் விதைகள் வழங்கப்படுகிறது' என, கொல்லிமலை வேளாண் உதவி இயக்குனர் தமிழ்ச்செல்வி தெரிவித்துள்ளார்.இது குறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கை:கொல்லிமலை வட்டாரத்தில சான்று பெற்ற ஐ.ஆர்.20 மற்றும் ஐ.பி.யூ.28 ரக விதைகள் விதை கிராமத்திட்டத்தில் 50 சதவீதம் மானிய விலையில், செம்மேடு வேளாண் விரிவாக்க மையத்தின் மூலம் வினியோகம் செய்யப்பட உள்ளது.விதை கிராமத்திட்டத்தின் கீழ் விதைகள் வாங்கும் விவசாயிகளுக்கு விதை நேர்த்தி செய்தல், நுண்ணூட்டம் இடுதல், ஒருங்கிணைந்த பயிர் பாதுகாப்பு மேற்கொள்ளுதல், நீர் நிர்வாகம், உரநிர்வாகம், பின்செய் விதை நேர்த்தி ஆகிய தொழில் நுட்பங்கள் குறித்து பயிற்சி அளிக்கப்பட உள்ளது.

விதை நேர்த்திக்கு தேவையான உயிர் உரங்கள் மற்றும் உயிரியல் காரணிகளான ஆடோமோனாஸ் டிரைகோடெர்மாவிரிடி ஆகியவையும், வேளாண் விரிவாக்க மையத்தில் தேவையான அளவு இருப்பு வைக்கப்பட்டு வினியோகம் செய்யப்பட உள்ளது.நெல், ராகி சாகுபடி செய்யும் விவசாயிகள் இந்த வாய்ப்பை பயன்படுத்தி அதிக மகசூல் பெறலாம். மேலும், விபரங்களுக்கு வேளாண் உதவி அலுவலர் அல்லது துணை வேளாண் அலுவலர்களை தொடர்பு கொள்ளலாம்.இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

**பயிறு வகை சாகுபடி அதிகரிக்க திட்டம்: உதவி இயக்குனர் தகவல்**

பதிவு செய்த நாள் : ஆகஸ்ட் 07,2010,02:16 IST

பள்ளிப்பாளையம்: "பயிறு வகை சாகுபடி பரப்பை அதிகரித்து இரு மடங்கு மகசூல் கிடைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது' என, பள்ளிபாளையம் வேளாண் உதவி இயக்குனர் முரளிதரன் தெரிவித்துள்ளார்.
இது குறித்து அவர் வெளியிட்ட அறிக்கை:இந்தாண்டு பயிறு சாகுபடி பரப்பு 1,200 ஹெக்டேராக மாற்ற திட்டமிடப்பட்டுள்ளது. பயிறு வகை சாகுபடி இயல்பான பரப்பு 600 ஏக்கர் மட்டும் ஆகும். அது இந்தாண்டு இருமடங்காக்கப்படும். ஒரு ஹெக்டேரில் சராசரி உற்பத்தித் திறன் 650 கிலோ மட்டும் ஆகும்.

அந்த உற்பத்தித் திறனும் இரு மடங்கு செய்யப்பட்டு ஒரு ஹெக்டேரில் 1,300 கிலோ மகசூல் கிடைக்கும்படி திட்டமிடப்பட்டுள்ளது.இந்தாண்டு பயிறு உற்பத்தி மொத்தக்

குறியீடு 1,500 மெட்ரிக் டன் என நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இக்குறியீட்டை அடையும் விதத்தில் பயிறுவகை சாகுபடிகளை விதைப் பயிராகவும், கலப்புப் பயிராகவும், சாகுபடி பயிராகவும், ஊடுபயிராகவும், வரப்புப் பயிராகவும் நடவு செய்து சாகுபடி பரப்பு அதிரிக்கப்படும்.டி.ஏ.பி., உரக்கரைசலை இலைவழி தெளிப்பு நுட்பம் மூலம் பரவலாக மேற்கொள்ளப்படும்.

தற்போது சாகுபடியில் உள்ள துவரைப் பயிரில் இலை வண்டு என்ற பூச்சியின் தாக்குதல் தென்படுகிறது. இந்த இலை வண்டு துவரை இலைகளை வட்டமாக கடித்து சேதம் உண்டாக்கும். இந்த வகை வண்டுகளை கட்டுப்படுத்த என்டோசல்பான் மருந்து ஐந்து மில்லியை ஒரு லிட்டர் நீர் என்ற அளவில் கலந்து தெளிக்க வேணடும்.இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**வரப்பில் பயறு சாகுபடிக்கு பரிந்துரை**

பதிவு செய்த நாள் : ஆகஸ்ட் 07,2010,02:24 IST

ஈரோடு: கூடுதல் வருமானம் பெற பயறு வகைகளை சாகுபடி செய்யலாம் என வேளாண் அதிகாரி தெரிவித்துள்ளார்.
ஈரோடு வேளாண் இணை இயக்குனர் கோபால் அறிக்கை:பயறு வகை பயிர்கள் குறுகிய காலத்தில், குறைந்த செலவில், அதிகமான வருவாய் அளிக்கக்கூடியவை. பயறுவகை பயிர்கள் கால்நடை தீவனமாகவும், வயலுக்கு பசுந்தாள் உரமாகவும் பயன்படுகிறது. இதில் உள்ள புரதச்சத்து உடல் வளர்ச்சிக்கும், மூளை வளர்ச்சிக்கும் உதவுகிறது. பயறுவகை பயிர்கள் ஓராண்டில் ஒரு ஹெக்டேருக்கு 17 முதல் 270 கிலோ வரை தழைச்சத்தை நிலத்தில் சேகரித்து வைக்கும்.நெல் நடவு வயலின் பரப்புகளில் பக்கவாட்டில் கீழிருந்து உளுந்து, பாசிப்பயறு, தட்டைப் பயறு ஆகிய பயிர்களை சாகுபடி செய்யலாம். 100 மீட்டர் நீளமுள்ள வரப்பில் விதைக்க 50 கிராம் விதையை பயன்படுத்த வேண்டும். நெல் நடவு செய்தவுடன் ரைசோபியம் மற்றும் பாஸ்போ பாக்டீரியா நுண்ணுயிர் கலந்த பயறுவகை விதைகளை 30 செ.மீ., இடைவெளியில் விதைக்க வேண்டும்.

தட்டைப் பயறுக்கு 45 செ.மீ., இடைவெளி விட வேண்டும். பயறு வகைகளுக்கு தனியாக நீர்பாய்ச்ச தேவையில்லை. இம்முறையானது கூடுதலான வருமானம் தருவதுடன் பயறு வகைகளில் தோன்றும் பொறிவண்டு போன்றவை, பூச்சிகளை உணவாக உட்கொண்டு நன்மை செய்கின்றன.கரும்பு, வாழை, மஞ்சள் மற்றும் தென்னையில் பயறு வகை பயிர்களை ஊடுபயிராக சாகுபடி செய்யலாம். பாசன ஆதாரம் உள்ள பகுதியில் தனிப்பயிராக பயிரிடலாம்.

**கரும்பு ஆலை நிர்வாகத்துடன் விவசாயிகள் பேச்சு வார்த்தை**

பதிவு செய்த நாள் : ஆகஸ்ட் 07,2010,02:39 IST

தேனி : தனியார் கரும்பு ஆலை நிர்வாகத்திடமிருந்து பாக்கித்தொகையை மாநில சர்க்கரை துறை ஆணையர் பெற்றுத்தரவேண்டும் என விவசாயிகள் வலியுறுத்தியுள்ளனர். குள்ளப்புரத்தில் உள்ள ராஜ்ஸ்ரீ சர்க்கரை ஆலையில் பதிவு செய்துள்ள கரும்பு விவசாயிகளுக்கு ஆலை நிர்வாகம் பாக்கி தொகை தரவேண்டி உள்ளது. இது குறித்து தமிழ்நாடு கரும்பு விவசாயிகள் சங்க மாவட்ட செயலாளர் கண்ணன், மாவட்ட பொருளாளர் ராமராஜ் மற்றும் நிர்வாகிகள் ஏழுமலை, சின்னவேலுச்சாமி உட்பட பலர் ஆலை பொது மேலாளர் சத்தியமூர்த்தியுடன் பேச்சுவார்த்தை நடத்தினர்.
கலெக்டர் தலைமையில் 2010 ஜூன் 9 ல் நடந்த முத்தரப்பு கூட்ட முடிவின்படி 2003, 04 ல் அரவை பருவத்துக்கு 5 ஏ விலை பாக்கி 44.31 ரூபாயில் 2006 ஜூன் 5 ல் ஆலையின் ரெக்கவரி உட்பட 44.31 ரூபாய் தர ஆலை நிர்வாகம் மறுப்பது குறித்தும், 2002-03 ல் மத்திய அரசின் எஸ்.எம்.பி., பாக்கி பணம் 86.72 ரூபாய் வழங்க உத்தரவிட்டும் காலதாமதம் செய்யப்படுவதாக தெரிவித்தனர்.தமிழக அரசும், மாநில சர்க்கரை த்துறை ஆணையரும் தலையிட்டு பாக்கி தொகையை பெற்றுத்தர வேண்டும் என வலியுறுத்தி உள்ளனர்.

**பசுந்தேயிலை மாதாந்திர விலை கவலையில் அங்கத்தினர்கள்**

பதிவு செய்த நாள் : ஆகஸ்ட் 07,2010,01:36 IST

மஞ்சூர் : பசுந்தேயிலைக்கான மாதாந்திர விலை நிர்ணயத்தில், 50 பைசா மட்டுமே உயர்த்தப்பட்டதால், விவசாயிகள் கவலையடைந்துள்ளனர்.நீலகிரி மாவட்டத்தில் உள்ள 15 கூட்டுறவு தேயிலைத் தொழிற்சாலைகளில் 30 ஆயிரத்துக்கு மேற்பட்ட அங்கத்தினர்கள் உள்ளனர். கூட்டுறவு தேயிலைத் தொழிற்சாலைகளுக்கான மாதாந்திர விலை நிர்ணயம், குன்னூர் இன்ட்கோ சர்வ் அலுவலகத்தில், அதிகாரிகள் தலைமையில், அந்தந்த கூட்டுறவு தேயிலைத் தொழிற்சாலைகளின் தனி அலுவலர்கள் முன்னிலையில் கூட்டம் நடத்தப்படுகிறது.

ஜூலை மாதத்துக்கான விலை நிர்ணயம், நேற்று முன்தினம் குன்னூர் இன்ட்கோ சர்வ் அலுவலகத்தில் நடத்தப்பட்டது.மஞ்சூர், பிக்கட்டி, எடக்காடு, கைகாட்டி, மகாலிங்கா, பிதர்காடு, எருமாடு உட்பட கூட்டுறவு தேயிலைத் தொழிற்சாலைகளுக்கு கிலோவுக்கு 7 ரூபாய் நிர்ணயிக்கப்பட்டுள்ளது. சாலீஸ்பரி கூட்டுறவு தேயிலை தொழிற்சாலையில் ஒரு ரூபாய் சேர்ந்து 9 ரூபாய், பந்தலூர் தொழிற்சாலைக்கு 7.50, கிண்ணக்கொரை தொழிற்சாலைக்கு 6.75, இத்தலார், மேற்குநாடு, கரும்பாலம், எப்பநாடு தொழிற்சாலைகளுக்கு 6.50 விலை நிர்ணயிக்கப்பட்டுள்ளது.கடந்த மாதத்தை விட கிலோவுக்கு 50 பைசா மட்டுமே உயர்த்தப்பட்டுள்ளதால், அங்கத்தினர்கள் கவலையடைந்துள்ளனர். விவசாயிகளின் நலன் கருதி, மத்திய, மாநில அரசுகள் உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும் என வலியுறுத்தப்பட்டுள்ளது.

**ஜனவரி – ஜூன் மாத காலத்தில் இந்தியாவின் தேயிலை ஏற்றுமதி 8.40 கோடி கிலோவாக உயர்வு**



*இக்கனாமிக் டைம்ஸ் செய்தி பிரிவு*

*கொல்கத்தா*

*நடப்பு ஆண்டில் ஜனவரி – ஜூன் மாத காலத்தில் 8.40 கோடி கிலோ தேயிலை ஏற்றுமதி செய்யப்பட்டுள்ளது. இது, சென்ற ஆண்டின் இதே காலத்தில் 7.50 கோடி கிலோவாக இருந்தது. ஆக, நாட்டின் தேயிலை ஏற்றுமதி 90 லட்சம் கிலோ அதிகரித்துள்ளது.*

*அன்னியச் செலாவணி*

*இதனையடுத்து தேயிலை ஏற்றுமதி நிறுவனங்களின் வருவாயும் சிறப்பான அளவில் அதிகரித்துள்ளது. சென்ற ஆண்டு ஜனவரி–ஜூன் மாத காலத்தில் மொத்தம் ரூ.984 கோடி அன்னியச் செலாவணி ஈட்டிய ஏற்றுமதியாளர்கள், நடப்பாண்டில் ரூ.1,036 கோடி ஈட்டியுள்ளனர்.*

*கணக்கீடு செய்ய எடுத்துக் கொண்ட காலத்தில் வட மாநிலங்களின் தேயிலை ஏற்றுமதி 20 லட்சம் கிலோ குறைந்துள்ளது. ஆனால் தென் மாநிலங்களின் ஏற்றுமதி 1.10 கோடி கிலோ அதிகரித்துள்ளது. இதனையடுத்து நாட்டின் மொத்த தேயிலை ஏற்றுமதி 90*

*லட்சம் கிலோ உயர்ந்துள்ளது.*

*தேயிலை வாரியத்தின் புள்ளிவிவரங்களின்படி, சென்ற மே மாதத்தில் வட மாநிலங்களில் தேயிலை உற்பத்தி 30 லட்சம் கிலோ சரிவடைந்துள்ளது. ஜூன் மாதத்தில் அசாம் மற்றும் மேற்கு வங்காளம் ஆகிய மாநிலங்களின் தேயிலை உற்பத்தியில்தான் அதிகபட்ச சரிவு ஏற்பட்டுள்ளது. அசாம் மாநிலத்தில் உற்பத்தி 1.30 கோடி கிலோ குறைந்துள்ளது. மேற்கு வங்காளத்தில் 20 லட்சம் கிலோ சரிந்துள்ளது. இதனையடுத்து, ஜூன் மாதத்தில், வட மாநிலங்களின் தேயிலை உற்பத்தி ஒட்டுமொத்தத்தில் 1.50 கோடி கிலோ சரிவடைந்துள்ளது.*

*முன்னணி மாநிலங்கள்*

*நம் நாட்டில் வடகிழக்கு மாநிலங்களிலும், தென் மாநிலங்களிலும் தேயிலை அதிக அளவில் உற்பத்தியாகிறது. அசாம், மேற்கு வங்காளம், தமிழ்நாடு மற்றும் கேரளா ஆகிய மாநிலங்கள் தேயிலை உற்பத்தியில் முன்னிலையில் உள்ளன. கர்நாடகா, திரிபுரா, இமாச்சலபிரதேசம், உத்தராஞ்சல், அருணாச்சலபிரதேசம், மணிப்பூர், சிக்கிம், நாகாலாந்து, மேகாலயா, மிசோராம் மற்றும் பீகார் ஆகிய மாநிலங்களிலும் தேயிலை உற்பத்தி செய்யப்படுகிறது.*

*நாட்டின் மொத்த தேயிலை உற்பத்தியில் அசாம் மாநிலத்தின் பங்களிப்பு 50 சதவீதமாக உள்ளது. சென்ற மே மற்றும் ஜூன் மாதங்களில் தேயிலை தோட்டங்களில் பூச்சித் தாக்குதல், கனமழை போன்ற இடர்பாடுகளால் அம்மாநிலத்தின் தேயிலை உற்பத்தி குறைந்து போனதாக தெரிகிறது. தற்போது நம் நாட்டில் ஒரு ஆண்டுக்கு தனிநபர் தேயிலை நுகர்வு 800 கிராம் ஆக உள்ளது. இது, பாகிஸ்தானில் ஒரு கிலோவாக உள்ளது.*

***ஏப்ரல் – ஜூன் மாத காலத்தில் அரசின் உர மானிய செலவு ரூ.8,900 கோடி***



இக்கனாமிக் டைம்ஸ் செய்தி பிரிவு

புதுடெல்லி

விவசாயிகளுக்கு மானிய விலையில் உரங்கள் வழங்கப்படுகின்றன. நடப்பு நிதி ஆண்டின் முதல் காலாண்டில் (ஏப்ரல் – ஜூன்), மத்திய அரசின் உர மானியச் செலவினம் ரூ.8,900 கோடியாக உள்ளது என்று உரங்கள் மற்றும் ரசாயனத் துறைக்கான மத்திய ராஜாங்க அமைச்சர் ஸ்ரீகாந்த் குமார் ஜனா மக்கள் அவையில் கேள்வி ஒன்றுக்கு பதில் அளிக்கும்போது தெரிவித்தார்.

கடந்த 2007–08–ஆம் நிதி ஆண்டில், உர மானியச் செலவினம் ரூ.43,319.31 கோடியாக இருந்தது. 2008–09–ஆம் நிதி ஆண்டில் இது இரண்டு மடங்கிற்கும் மேல் அதிகரித்து ரூ.99,494.72 கோடியாக உயர்ந்தது. எனினும், சென்ற 2009–10–ஆம் நிதி ஆண்டில் இது ரூ.64,031.94 கோடியாக குறைந்தது என்பது குறிப்பிடத்தக்கது.

கடந்த மூன்று ஆண்டுகளில், மத்திய அரசுக்கு ஏற்பட்ட உர மானியச் செலவினம் ரூ.2 லட்சம் கோடியை தாண்டி உள்ளது.

# மலர்ந்த கேலண்டுலா மலர்கள்



நீலகிரி மாவட்டத்தில் விவசாயிகள் காய்கறி, தேயிலை போன்றவற்றுக்கு அடுத்தபடியாக மலர் சாகுபடியிலும் ஈடுபட்டு வருகிறார்கள். ஊட்டி அருகே மணியட்டி பகுதியில் ஒரு தோட்டத்தில் ஏற்றுமதி தரம் வாய்ந்த கேலண்டுலா மலர்கள் நடவு செய்யப்பட்டன. தற்போது அவை பூத்துக்குலுங்குவதை படத்தில் காணலாம்.

***கூடலூரில், காலம் தவறிய மழையால் குறுமிளகு விளைச்சல் பாதிப்பு***


கூடலூர் பகுதியில் காய்த்துள்ள குறுமிளகு காய்களை படத்தில் காணலாம்.

*கூடலூர், ஆக.7–*

*கூடலூரில் காலம் தவறிய பருவ மழையால் குறுமிளகு விளைச்சல் பாதிக்கப்பட்டுள்ளது. இருப்பினும் நல்ல விலை கிடைத்து வருவ தால் விவசாயிகள் மத்தியில் ஆறுதல் ஏற்பட்டுள்ளது.*

*காலம் தவறிய பருவமழை*

*கூடலூர் பகுதியில் தென் மேற்கு பருவமழை காலம் தவறி பரவலாக பெய்து வருகிறது. வழக்கமாக ஜூன் மாதம் பெய்யும் மழை இந்த ஆண்டு ஜூலை இறுதியில் பெய்ய தொடங்கி உள்ளது. இருப்பினும் போதிய மழை இன்னும் சரிவர பெய்ய வில்லை. இதனால் பணப்பயிரான குறுமிளகு விளைச்சலும் பாதிக்கப்பட்டுள்ளது. கடந்த ஆண்டு குறுமிளகு விளைச்சல் போதிய அளவு இல்லாததால் விவசாயிகள் பெரும் சிரமத் துக்கு ஆளாகினர். இந்த ஆண்டு விளைச்சல் அதிகரிக் கும் என விவசாயிகள் பெரிதும் எதிர்பார்த்திருந்தனர். ஆனால் காலம் தவறிய மழையால் குறுமிளகு விளைச் சல் பாதிக்கப்பட்டுள்ளது.*

*நல்ல விலை கிடைத்தும் விளைச்சல் இல்லை*

*கடந்த 2 ஆண்டுகளுக்கு முன்பு கிலோ குறுமிளகு ரூ.55 கிடைத்து வந்தது. கடந்த ஆண்டு கிலோவுக்கு சராசரி யாக ரூ.100 வரை விலை கிடைத்தது. ஆனால் தற்போது 1 கிலோ குறுமிளகு ரூ.190 வரை நல்ல விலை கிடைத்து வருகிறது. இருப் பினும் எதிர்பார்த்த விளைச் சல் இல்லாமல் உள்ளது.*

*கடந்த ஆண்டை காட்டிலும் விலையிலும், விளைச்சலில் முன்னேற்றம் இருந்தாலும் பருவமழை காலம் தவறி பெய்த மழையால் போதிய விளைச்சல் இல்லை என விவசாயிகள் கூறி வருகின் றனர்.*

*இது குறித்து விவசாயி ஒருவர் கூறும் போது கடந்த ஆண்டை காட்டிலும் விளைச் சல் அதிகரித்துள்ள நிலையில் எதிர்பார்த்த விளைச்சல் இல்லை. குறுமிளகின் பிறப் பிடமான வியட்நாமில் குறு மிளகு விளைச்சல் அடியோடு பாதிக்கப்பட்டு ள்ளது. மேலும் மார்க்கெட்டில் குறுமிளகு வரத்து குறைந்துள்ளது. இதனால் குறுமிளகு நல்ல விலை உள்ளதாக கூறினார்.*